அவன் ஒரு கிறிஸ்தவன் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? அவன் கிறிஸ்துவைப் போன்று செயல்படுகிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று நடந்து செல்கிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று பேசுகிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று பாவத்திற்கு மேலாக வெற்றியோடு ஜீவிக்கிறான்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும் (YOU MUST BE BORN AGAIN)

ஞாயிறு காலை, டிசம்பர் 31, 1961
பிரான்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா


187. **நீங்கள் மறுபடியும் பிறக்கும் போது, தேவன் உங்களை நிரூபிக்கிறார்.**

**அவ்வாறு தான் தேவன் தம்முடைய இயற்கை எல்லாவற்றையும் நிரூபிக்கிறார்.**

**எதைக்கொண்டு? அவர்களுடைய கனிகளைக்கொண்டு.**

அந்தவிதமாகத்தான் அவர் தம்முடைய ஊழியத்தை நிரூபிக்கிறார். அது சரியே.

அவருடைய ஊழியக்காரர்கள் எல்லாரும் அவர் இயற்கையை நிரூபிக்கிற அதேவிதமாகவே நிரூபிக்கப்படுகிறார்கள்.



அது ஒரு பீச் மரம் என்று நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்கிறீர்கள்? காரணம் என்னவென்றால், அது பீச் பழங்களைக் (peaches) கொடுக்கிறது.



அது ஒரு ஆப்பிள் மரம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அது ஆப்பிள் பழங்களைக் கொடுக்கிறது.

**அது ஒரு கிறிஸ்தவன் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? கிறிஸ்தவனுடைய அடையாளங்கள் அதிலிருந்து பிறப்பிக்கப்படுகிறது, கிறிஸ்தவ ஜீவியம் அதிலிருந்து வருகிறது.**

அவர் ஒரு போதகர் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? வார்த்தை அவரிடமிருந்து வருகிறது.

அவன் ஒரு தீர்க்கதரிசி என்று உங்களுக்கு எப்படி தெரிகிறது? வார்த்தை அவன் மூலமாக வந்து, சாட்சி கொடுக்கிறது, மெய்ப்பித்துக்

காட்டுவது. அது தன்னைத்தானே நிரூபிக்கிறது. அது எப்படி அவ்விதம் ஆகிறது? அது மரிக்கும் போது, அதுவாக ஆகிறது. அது சரியே.

நாம் மரித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புது சிருஷ்டியாக ஆகும் போது, அது நம்முடைய அழைப்போடு நம்மிடம் வருகிறது, நாம் நம்முடைய அழைப்பில் தரித்திருக்கிறோம். நாம் அவருடைய ஊழியக்காரர்களாக இருக்கும்போது, ஆவியின் கனிகள் நம்மைப் பின்தொடருகின்றன.

**நாம் மறுபடியும் பிறக்கும் போது, கிறிஸ்துவினுடைய ஜீவனின் கனிகள் நம்மைப்**

**பின்தொடருகின்றன. அது சரியே.**

அது ஒரு பீச் மரம் என்று உங்களுக்கு எப்படி தெரிகிறது? அதில் பீச் கனிகள் (peaches) உள்ளன.



அவன் ஒரு கிறிஸ்தவன் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? அவன் கிறிஸ்துவைப் போன்று செயல்படுகிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று நடந்து செல்கிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று பேசுகிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று பாவத்திற்கு மேலாக வெற்றியோடு ஜீவிக்கிறான்.

**அவன் என்ன செய்கிறான், "நான் என்ன செய்திருக்கிறேன் என்று பாருங்கள்" என்று கூறலாம். கிறிஸ்து அவ்விதம் செய்யவில்லை. அவர் எல்லா துதியையும் பிதாவுக்கே**

**கொடுத்தார். அது சரியே. அவ்வாறு தான் நீங்கள் அதை அறிந்து கொள்கிறீர்கள். அவர்களுடைய கனிகளினாலே, நீங்கள் அவர்களை அறிந்து கொள்வீர்கள்.** என்ன... கட்டாயமாக.

188. “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், அவனால் தேவனுடைய இராஜ்யத்தைப் புரிந்து கொள்ளக் கூட முடியாது என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.”



